**<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் ( சார்பு நீதிமன்றம்),</u>**
**<u>பொள்ளாச்சி</u>**

**முன்னிலை திரு. M. மணிகண்டன், M.A., M.L., PG.D.C.F.Sc,**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை
(2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 22 ம் நாள்)

**<u>மோ.வா.வி.கோ.மனு எண். 63/2020</u>**

<u>CNR No. TNCB – 11000241 – 2020</u>

கனகராஜ், த/பெ. கிருஷ்ணசாமி, இந்து, வயது 48, வசிப்பிட முகவரி எண்.2/265, மோசலகண்டி தோட்டம், கல்லாபுரம் (எ) குதிரையாலாம்பாளையம், கிணத்துக்கடவு, கோயமுத்தூர்.

...மனுதாரர்

**/எதிர்/**

1. M.செல்வராஜ், த/பெ. முருகா கவுண்டர், இந்து, வயது 30, வசிப்பிட முகவரி கதவு எண்.2/41, குதிரையாலாம்பாளையம், பொள்ளாச்சி, கோயமுத்தூர்.

2. M/s. யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிட், எண்.284/3, வாணி காம்ப்ளக்ஸ், பொள்ளாச்சி மெயின் ரோடு, கிணத்துக்கடவு, கோயமுத்தூர் மற்றும் மண்டல அலுவலகம் எண்.178, டாக்டர். நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர்.

...எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது கடந்த 27.02.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.கே.விஜய்குமார், பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.M.ரவிச்சந்திரன், பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் என்னால் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது சீரிய ஆய்விற்கு உட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்,

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை ரூ.10,00,000/-த்தை மனு தாக்கல் செய்த 12.04.2019 ம் தேதி முதல் தொகை செலுத்தும் வரை பின்வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், இம்மனு செலவு தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சாராம்சம் :**

**2.1)** கடந்த 16.01.2018 ம் தேதியன்று மனுதாரர் அவரது தோட்டத்திற்கு செல்வதற்காக செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான TN 41 L 8305 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splender வாகனத்தை செல்வராஜ் ஓட்ட மனுதாரர் பின்புறம் அமர்ந்து ஏழுரிலிருந்து மனுதாரரின் தோட்டத்திற்கு செல்வதற்காக கல்லாபுரம் கண்ணாடி காரக்கவுண்டர் தோட்டம் அருகே உள்ள குறுக்கு ரோட்டில் மதியம் 2.30 மணியளவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து கல்லாபுரம் வடிசெட்டியப்பிச்சி கோவில் நோக்கி வந்த TN 37 CR 2802 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super வண்டியின் மீது மோதியதால் மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், தலையின் வலது பக்கம் ரத்த காயம் ஏற்பட்டு கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாக கூறப்பட்டுள்ளது.

2.2) விபத்து ஏற்படுவதற்கு முன்பாக மனுதாரர் விவசாயம் மற்றும் தனியார் நிறுவனத்தில் இரவு காவலராக பணிபுரிந்து மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வந்தார் என்றும், மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரே காரணம் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் காயங்களுக்காகவும், நிரந்தர ஊனத்திற்காகவும், வருமான இழப்பிற்காகவும், மன உளைச்சலுக்காகவும், துணி

மற்றும் பொருள் இழப்பிற்காகவும், போக்குவரத்து செலவிற்காகவும், ஊட்டச்சத்துக்காகவும் இழப்பீடாக ரூ.10,00,000/- கோரப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.3) 1ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 41 L 8305 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splender வாகனத்தின் ஓட்டுனர் என்றும், 2ம் எதிர்மனுதாரர் TN 41 L 8305 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splender இருசக்கர வாகனத்தின் காப்பீட்டாளர் என்றும், எனவே எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க பொறுப்புடையவர்கள் என்றும் இம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

**3**. 1ம் எதிர்மனுதாரர் தோன்றாரப்பினராக வைக்கப்பட்டு அவ்வாறே இருந்து வருகிறார்.

4. **<u>2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம் :-</u>**

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாருககு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது என்பதை மருத்துவ ஆவணங்கள் மூலம் மனுதாரர் தான் நிரூபணம் செய்யவேண்டும் என்றும், TVS XL Super வாகனத்தின் ஓட்டுநரையும், காப்பீட்டாளரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடானது மிகவும் அதிகமாக உள்ளது என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,</u>

1. இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், அதிவேகத்தாலும் மற்றும் கவனக்குறைவாலும் ஏற்பட்டதா ?

2. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டவர்களா? ஆம் என்றால் எவ்வளவு ?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

**6.** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17, வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. <u>பிரச்சினை 1–க்கான தீர்வு :–</u>

7.1) இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ம.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது கடந்த 16.01.2018ம் தேதியன்று மனுதாரர் அவரது தோட்டத்திற்கு செல்வதற்காக செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான TN 41 L 8305 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splender வாகனத்தை செல்வராஜ் ஓட்ட மனுதாரர் பின்புறம் அமர்ந்து ஏழுரிலிருந்து மனுதாரரின் தோட்டத்திற்கு செல்வதற்காக கல்லாபுரம் கண்ணாடி காரக்கவுண்டர் தோட்டம் அருகே உள்ள குறுக்கு ரோட்டில் மதியம் 2.30 மணியளவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து கல்லாபுரம் வடிசெட்டியப்பிச்சி கோவில் நோக்கி வந்த TN 37 CR 2802 என்ற பதிவெண் கொண்ட TVS XL Super வண்டியின் மீது மோதியதால் மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், தலையின் வலது பக்கம் ரத்த காயம் ஏற்பட்டு கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாக

தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.2) இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காவல்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரரின் மீது தான் முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தை பரிசீலனை செய்யும்போது விபத்தானது சாலையின் மையப்பகுதியில் நடைபெற்றது என்பது மாதிரி வரைபடத்தை கவனமாக பரிசீலனை செய்த வகையில் தெரியவருகிறது. மேலும் 1ம் எதிர்மனுதாரரின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொறுத்து எவ்வித முறையீடும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது.

7.3) ஆனால் இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் ம.சா.1ன் சாட்சியத்தை சுட்டிக்காட்டி ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாக வாகனத்தை ஓட்டினாரா என்றால் மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும், விபத்து சமயத்தில் எதிர்புறம் வந்த வாகனம் தான் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான் என்றும் சாட்சியத்துள்ளதை சுட்டிக்காட்டி இந்த வழக்கில் TVS XL Super வாகனத்தை ஓட்டி நபர் தான் அவருடைய வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்தார் என்றும், அந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லாத காரணத்தினால் 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் தெளிவாக தெரிவித்துள்ளார் என்றும் வாதிட்டார். அதற்கு மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தெளிவாக 1ம் எதிர்மனுதாரரின் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் படிப்பறிவு இல்லாதவர் என்றும், அவர் நீதிமன்றத்தில் பதற்றமடைந்து அவ்வாறு

கூறிவிட்டார் என்றும், மனுதாரரின் சாட்சியத்தை விட ஆவண சாட்சியத்திற்கு தான் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

7.4) அதற்கு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் ம.சா.1ன் சாட்சியத்தில் 1ம் எதிர்மனுதாரர் மெதுவாக தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்று கூறும் நிலையில் TVS XL Super வாகனத்தை ஓட்டி வந்த நபர் தான் தவறு புரிந்து விட்டார் என்ற நிலையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று வாதிட்டார். அதனைப் பொறுத்து இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது Roop Kumar Vs Mohan Thedani (2003) 6 SCC 595 என்ற முன்தீர்ப்பை பரிசீலனை செய்யும்போது Documentary evidence is the best evidence of the contents of document and oral evidence cannot override the written terms என்று கண்டுள்ளது. மேலும் Narayan Bhagwantrao Gosavi Balajiwale Vs Gopal Vinayak Gosavi AIR 1960 SC 100 என்ற முன்தீர்ப்பை பரிசீலனை செய்யும்போது Documentary evidence is clear, oral evidence inconsistent with it cannot be accepted என்ற கண்டுள்ளது.

7.5) ஆகவே மேற்கண்ட முன்தீர்ப்புகளையும் இந்த வழக்கின் ம.சா.1ன் சாட்சியத்தையும் பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரர் தான் தவறு புரிந்துவிட்டார் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் ம.சா.1 நீதிமன்றத்தில் சாட்சியத்துள்ளதை வைத்து மட்டும் இந்த வழக்கில் முடிவு காண இயலாது என்றும், மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் நீதிமன்றத்தில் பதற்றம் அடைந்து சொல்லியிருக்க வாய்ப்பிருக்கும் என்ற நிலையில் ஆவண சாட்சியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்ற நிலையில் காவல்துறை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் 1ம் எதிர்மனுதாரரின் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தான் தன்னுடைய வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று மேற்கண்ட எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**8. பிரச்சனை 2 மற்றும் 3–க்கான தீர்வு :–**

8.1) இந்த வழக்கில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்று இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும் போது, மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், தலையின் வலது பக்கம் ரத்த காயம் ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.4 காயச்சான்றிதழை பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயங்கள் என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆகவே மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்காக மனுதாரருக்கு ரூ.20,000/– கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

8.2) மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவிற்கான பில்கள் ரூ.1,78,462/– தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித மறுப்பும் தெரிவிக்காத நிலையில் அந்த தொகை அவ்வாறே மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவும், தலையின் வலது பக்கம் ரத்த காயம் ஏற்பட்டுள்ளது என்றும், அது கொடுங்காயம் என்பதும் காயச்சான்றிதழ் மூலம் தெரியவருவதால் மனுதாரருக்கு ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.5,000/–மும், வலி மற்றும் வேதனைகளுக்காக ரூ.15,000/–மும் கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 48 வயது என்றும், அவர் விவசாயம் மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தார் என்றும் தெரிவித்துள்ள நிலையில் ஆனால் அதனைப் பொறுத்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரரின் வேலை மற்றும் வயதினை கருத்திற்கொள்ளும்போது அவர் மாதம் ரூ.12,000/– சம்பாதித்திருப்பார் என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தின் காரணமாக மனுதாரர் குறைந்தது 3 மாதங்களுக்கு எந்த வேலைக்கு சென்றிருக்க முடியாது என்ற

நிலையில் மூன்று மாதங்களுக்கு வருமான இழப்பாக ரூ.36,000/- கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. ஆகவே

**Calculation Sheet**

| Sl.No. | Under the Head | Calculation |
|---|---|---|
| 1 | For Pain and Sufferings | Rs.15,000/- |
| 2. | For Extra Nourishment | Rs.5,000/- |
| 3. | For Medical Bills | Rs.1,78,462/- |
| 4. | Loss of Income<br>1 Month – Rs.12,000/-<br>3 Month – Rs.36,000/- | Rs.36,000/- |
| 5. | For Grievous Injury | Rs.20,000/- |
| | **Total** | **Rs.2,54,462/-** |

எனவே இந்த மனுவில் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை **ரூ.2,54,462/- Rounded of to ரூ.2,54,500/-** அவ்வாறே பிரச்சனை எண்.2 மற்றும் 3 ஐ தீர்மானிக்கிறேன்.

"மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் M/s.Cholamandalam MS General Insurance Company Limited., Vs. Ayyanar & others. (2020 (4) CTC 272) என்ற வழக்கில் வழங்கிய உத்தரவின் படி இறுதி உத்தரவு தயார் செய்யப்படாது." என்றும்,

"மேலும் MV Act Section 168(2) மற்றும் விதி 20 (6)ன் படி தரப்பினர்கள் உத்தரவின் நகலை இலவசமாகப் பெறத்தக்கவர்கள்." என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

ஆகவே, **முடிவாக,** இம்மனு பகுதியாக செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு, 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை **ரூ.2,54,500/-**த்தை மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (தள்ளுபடி காலம் நீங்கலாக)

இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் Motor Accident Claims Tribunal/Subordinate Judge, State Bank of India. Pollachi Branch Account Number SJPOY1 IFSC Code SBIN0004266 என்ற வங்கி கணக்கில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்தவேண்டும் என்றும், மேற்படி தொகை மற்றும் மனுதாரரின் செலவுதொகை மற்றும் மொத்தத் தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன் இத்தீர்ப்பாயத்தை அணுகி உரியவங்கி அறிவுறுத்தலைப் பெற்று, மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டு தொகை முழுவதையும் மற்றும் அதற்குண்டான வட்டியையும் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது. பற்றாக்குறை நீதிமன்றக் கட்டணம் இருப்பின் 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்தத் தவறிய காலத்திற்கு உரிய வட்டியை இழப்பதோடு, செலுத்தும் வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. **வழக்கறிஞர் கட்டணம் ரூ.8,090/- எனவும், நீதிமன்ற கட்டணம் ரூ.1,917.50 நிர்ணயம் செய்யப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.06 18:14:04 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| ம.சா.1 | கனகராஜ் |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் அதன் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 21.01.2018 | முதல் தகவல் அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.2 | 21.01.2018 | இறுதி அறிக்கை சான்று |
| ம.சா.ஆ.3 | – | மாதிரி வரைபடம் சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 24.01.2018 | காயச்சான்றிதழ் சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 22.02.2018 | TN 41 L 8305 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | 24.01.2018 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல் |
| ம.சா.ஆ.7 | – | ரூ.1,78,462/–க்கான மருத்துவ பில்கள் அசல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை**

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.06 18:14:12 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>FAIR ORDER/ DRAFT ORDER</u>**
MCOP No.63/2020
06.03.2026
Sub Court, Pollachi